**தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகம்**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரிமாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாவட்டசெயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022மே 23 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டசெயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே20 ஆம் திகதிகணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து,நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின்பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.என்னால்மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை பெற்றுக் கொள்கையில் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணலின் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கானகொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என மதிப்பிடல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள்நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை**

**1.6.1 நிதி நிலமை தொடர்பான கூற்று**

பின்வரும் அவதானிப்புகள்மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின்கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் தலைப்பு 278 இற்குட்படாத மற்றும் பயன்படுத்தாத ரூபா 6,150,000 ஆன மூடப்பட்ட பாடசாலை கட்டிடமொன்று நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இது பற்றி கண்டறிந்து சரிசெய்ய குறித்துக் கொண்டதாக அறிவிக்கிறேன். | சரியாக உரிமையை இனங்கண்டு அச்சொத்துக்களை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் 18 இல் பேரேட்டு நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் (நிதியல்லாத சொத்து) பெறுமதி கூட்டுத் தொகை ரூபா 2,084,793,758 ஆன போதும் மாவட்ட செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்று பிரகாரம் அப்பெறுமதி ரூபா 2,119,331,612 ஆனதில் ரூபா 34,537,854 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 03பிரதேச செயலங்களில் அறிக்கையிடலின் தவறுகள் இதற்கு காரணமாகவுள்ளன. | வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உரிய முறையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுவதும் ஒப்பீடொன்றை மேற்கொள்வதனூடாக உண்மைத் தன்மையை உறுதி செய்துகொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 காசு பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின்கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதியல்லாத சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த வருமானம் ரூபா 294,710 ஆன போதும் அதில் ரூபா 98,395 மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பாக குறித்த பிரதேச செயலகத்திற்கு எதிர்காலத்தில் ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கோரிய கட்டுநிதி கிடைக்காததால்10 வேலை திட்டங்களின் கீழ் கைச்சாத்திட்ட தொகை ரூபா 149.1மில்லியனான103 கருத்திட்டங்களில் 102 இனது வேலைகள் பூர்த்தியாகியுள்ள போதும், முற்பணம் இல்லாததன் காரணமாகமீளாய்வாண்டு இறுதியில்ரூபா 104.5 மில்லியன் தொகை அக்கருத்திட்டங்களிற்காக செலுத்த வேண்டியிருந்தது. | போதிய கட்டுநிதி கிடைக்காததன் காரணமாக இக் கருத்திட்டங்களிற்காக கொடுப்பனவு செய்ய முடியாதுள்ளதாக. | திறைசேரியுடனான நெருங்கிய தொடர்புகளுடன் கட்டுநிதி முகாமைத்துவத்தை சரியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020/2021 பெறும் போகத்தில் நெல் கொள்வனவிற்கு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 3,000,000 ஆன மொத்த பணத்தையும்திறைசேறிக்கு மீள்நிரப்பியிருந்ததுடன், 2021 இடை போகத்தில் பயறு அறுவடையை கொள்வனவு செய்ய குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் கிடைத்த ரூபா 54,600,000 ஏற்பாடுகளிலிருந்துரூபா 27,701,254 அளவுஅதாவது 50.7 | இவ்வேலைத் திட்டம் அரசின் கொள்கை தீரமானத்தின் மீது செயற்படுத்திய ஒன்றெனவும், குறித்த பிரதேச செயலாளர்களால் தேவையான வசதிகளை உரிய முறையில் ஏற்பாடு செய்த போதும் | ஆண்டிற்காக திட்டமிட்ட பிரகாரம் நோக்கத்தை அமைந்து கொள்ள வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் விஷேட நடவடிக்கை ஒன்றிற்காககுறைநிறப்பு மதிப்பீட்டு ஒன்றின் மூலம் ஒதுக்கீட்டை பெற்றிருந்த போதும் குறித்த செயற்பாட்டிற்காகபயன்படுத்தாது ரூபா 26,898,746 எஞ்சியிருந்தது. | குறித்த அறிவித்த அளவை விற்பனை செய்ய விவசாயிகள் செயற்படாததால்ஒதுக்கீடு செய்த மொத்த ஏற்பாட்டு அளவையும் பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. | |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 18 பிரதேச செயலகங்களிற்கு ஏனைய 74 அமைச்சுக்கள்/ திணைக்களங்களில் இருந்து 80செயற்பாடுகளிற்காகவழங்கிய ரூபா 946.9 மில்லியன்ஏற்பாடுகளிலிருந்துமீளாய்வாண்டு இறுதியில் ரூபா 479.6 மில்லியன் நிதியேற்பாடுஎஞ்சியிருந்தது. அம் மீதி மொத்த நிதியேற்பாட்டின் 5 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சலவை கொண்டிருந்தது. | நிலவிய கொவிட் தொற்று நிலைமையின் மீது வேலைதிட்டங்களை திட்டமிட்டவாறுமேற்கொள்ள முடியாதிருந்தமை,முற்பணம் கிடைக்காமை,போன்ற விடயங்கள் இதற்கு காரணமானது. | கருத்திட்டங்களிற்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட ஏற்பாட்டை உச்ச மட்டத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையமாவட்ட செயலக நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான காணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிசெய்ய வேண்டியதுடன் அம் முறைமையின்செயற்திறன்தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாகமேற்கொள்வதற்குதேவையான மாற்றங்கள் செய்ய வேண்டுமெனவும், அம் மீளாய்வுகளை | மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக, உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று உள்ளதுடன், அது தொடர்பாக கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களிலும் காணப்படும் நிலைமை மீளாயப்படுகிறது. மேலும், அவ்வறிக்கையின் பிரதியொன்று அரச கணக்காய்வு பிரிவிற்கும் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய இருந்த போதும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொண்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக அவ்வப்போது உள்ளக கணக்காய்வு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலங்கள் 11 இற்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 37,968,871 பெறுமதியான 123 வைப்புகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | சுற்றறிக்கை பிரகாரம் 02 பிரதேச செயலகங்களினால் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை விரைவில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2012 ஜனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | | | |
| | • 3.2 (iv) பந்தி | கஹவத்த பிரதேச செயலகத்திற்கு உரியதாக ரூபா 1,485,109 பெறுமதியான 03 கருத்திட்டங்களை சுற்றறிக்கைக்கு மாற்றமாக உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன. | எந்தவொறு ஒப்பந்தத்திற்காகவும் உப ஒப்பந்தம் வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் 3.2 (iv) பந்தி பிரகாரம்நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை<br>----------------------------------- | | | |
| | (i) 2.8.1 (ஆ) வழிகாட்டி | வழிகாட்டி பிரகாரம் தொழிநுட்ப ஆய்வுக் குழுவிற்கு விடயம் தொடர்பாக அறிவுள்ள உத்தியோகத்தர் ஒருவர் உள்ளடங்க வேண்டிய போதும், எம்பிலிபிடிய பிரதேச செயலகத்திற்குஉரியதாகரூபா 1,340,300 பெறுமதியான தொழிநுட்ப உபகரணங்கள்,தைய்யல் இயந்திரங்கள் மற்றும் ஏனைய இயந்திரங்கள் கொள்வனவு செய்ய அதன் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்காக அத்துறையை பற்றிய அறிவுள்ள உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்திக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைபிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 3.4 பிரிவு | பெறுகைகள் நிறுவனத்தால் விலைமனு கோருவதனூடாக பொருத்தமான மனுதாரர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய போதும்,05 பிரதேச செயலகங்கள் அவ் ஏற்பாடுகளிற்கு மாற்றமாக 10 வாகனங்களின் சேவை நடவடிக்கைகளிற்காக ரூபா 999,133 செலுத்தியிருந்தது. | உயர் தொழிநுட்பத்துடன் கூடிய நிறுவனமொன்று பிரதேசத்தில் இல்லாதுள்ளமை, எதிர்காலத்தில் உரிய முறைப்படி விலைமனு கோரி சேவை செய்யுமாறு உத்தியோகத்தர்களைஅறிவூட்டல், நி.பி 135 அதிகார ஒப்படைபின் பிரகாரம் பிரதேச செயலாளருக்கு ரூபா 25,000 வரை பழுதுபார்த்தலிற்காக அதிகாரமளிக்க முடியும் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. | அரசபெறுகைகள் வழிகாட்டிக் கோவைபிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2006 திசெம்பர் 15 ஆந்திகதிய 19/2006 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | தமது பிரிவில் ஓய்வு பெற்ற ஒருவர் மரணித்தால் 07 நாட்களினுள் ஓய்வூதிய இலக்கத்துடன் அது பற்றி உடனடியாக பிரதேச செயலகத்திற்கு பிரிவு பொறுப்பு கிராம உத்தியோகத்தரினால் அறிவிக்க வேண்டிய போதும், அவ்வாறு செய்யாததனால் 03 பிரதேச செயலகங்களிற்குரிய 15 | நிலவிய கொரோனா தொற்று நிலைமையில் கிராம உத்தியோகத்தர்களுக்கு கடமை அதிகரித்த காரணத்தால் ஓய்வு பெற்றவர்களின் மரணங்களை எழுத்து மூலம் அறிவிக்க சிறிது காலம் எடுத்தல், ஏதேனும் ஓய்வு பெற்ற ஒருவர் மரணித்தால் 07 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள்பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு செலுத்திய ரூபா 542,688 ஆன ஓய்வூதிய தொகை அறவிட வேண்டியிருந்தது. | நாட்களிற்குள் ஓய்வூதிய பிரிவிற்கு அறிவூட்டுமாறு கிராம உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். |

## 2.6 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடம்மாறிச் சென்ற,ஓய்வு பெற்ற,சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவை தடைசெய்யப்பட்ட 17 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,213,837 தொடர்பில் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவை ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | தாபன விதிக்கோவைஏற்பாடுபிரகாரம் கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 பிரதேச செயலங்களிற்குஉரிய 697 வேலைகளிலிருந்து பெற்ற நிறுத்தற் பணம் ரூபா 40,722,851 உத்தரவாத கால எல்லையை கடந்து கணக்காய்வு திகதியான 2022 பெப்ரவரி 25 திகதியளவில் 01 மாதம் முதல் 35 மாதம் கடந்திருந்த போதும், அவற்றை விடுவிக்காது தொடர்ந்தும் பிரதேச செயலகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | செலுத்துவதற்கு முற்பணம் இல்லாதுள்ளமை. | உத்தரவாத கால எல்லையை கடந்துள்ள நிறுத்தற் பணத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 பிரதேச செயலகங்களின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 26 செயற்பாடுகளின் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ளாததன் சதவீதம் 57 முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டது. | கொவிட் தொற்று நிலைமை இதற்கு காரணமாக அமைந்தாக அறிவிக்கப்பட்டள்ளது. | இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் திட்டங்களை தயாரிக்க வேண்டியதுடன் அதன் இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காணி ஆணையாளர் நாயகத்தின் 1995 ஜுன் 15 திகதிய சுற்றறிக்கை இலக்கம் 2008/04 பிரகாரம் 2021 திசெம்பர் 31 திகதிக்கு அரச காணிகளிற்கு அனுமதிப்பத்திரம்/ ஒப்படைப் பத்திரம் விநியோகிக்கையில், 02 பிரதேச செயலகங்களில் காணி கச்சேரி நடாத்தப்படாமையும், 05 இல் நடாத்திய காணி கச்சேரிகளின் எண்ணிக்கை 01 முதல் 06 அளவான குறைந்த வீச்சலவை கொண்டிருந்தமையும், 04 இனால் முறையாக்க இருந்த காணி அளவுகளை இனங்காணாமையும், 04 இற்குரியதாக அனுமதியற்ற காணிகளை முறையாக்கவுள்ள காணி துண்டுகளை எண்ணிக்கையாக இனங்காணாமையும், 02 இனால் எவ்வித அனுமதிப்பத்திரமும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்காதிருந்தமை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தினுள் அனுமதியற்ற காணிகளை முறையாக்கும் செயன்முறை தாமதமான தன்மையை கொண்டிருந்தது. | ஆண்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக இலக்கு வைத்த எண்ணிக்கையை அடைந்து கொள்ள முடியாது போனதுடன், அனுமதியற்ற காணிகளை முறையாக்கும் செயற்திட்டத்தை துரிதமாக்க கவனம் செலுத்துவதாக அறிவிக்கப்பட்டள்ளது. | அனுமதியற்ற காணிகளை முறையாக்கும் செயற்திட்டத்தை விரைவில் முடிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்ய எதிர்பார்த்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 11,221,410 ஆன 31செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன. | சீமேந்து பற்றாக்குறை மற்றும் சந்தையில் நிர்மாண பொருட்களின் விலைகள் பாரிய அளவில் அதிகரித்த காரணத்தால் ஒப்பந்தம் செய்த சங்கங்களால் நிர்மாணங்களை புரக்கணித்தல், ஏற்பாடு போதாமை,செயற்திட்டங்களின் அடிப்படை வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் ஒப்பந்ததாரர்கள் வேலைகளை பூர்த்தி செய்ய ஆர்வம் காட்டாமை போன்ற விடயங்கள் இதற்கு காரணமாக அமைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. | உரிய கால எல்லையில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் திட்டங்களை முறையாக தயாரித்து கால எல்லைகளினுள் மேற்கொள்ளநடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புகள்மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த 04 ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டில்16 பிரதேச செயலக பிரிவுகளிற்குரிய மாவட்டத்தில் மாற்றுக் காணிகள் வழங்க இனங்கண்ட குடும்பங்களின் எண்ணிக்கை 2418 ஆன போதும், மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் தகைமையான காணிகள் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 1362 ஆனதுடன் அதன் முன்னேற்றம் 56 சதவீதமானது. | நபர்களினால் தெரிவு செய்த காணிகளை தே.க.ஆ.அ இனால் பரிந்துரைக்காமை, பரிசோதித்து அறிக்கை சமர்பிக்கும் போது தெரிவு செய்யப்பட்ட அக்காணிகளை விற்பனை செய்திருந்தமை,முன்மொழியும் அரச காணிகளில் வசிக்க விருப்பமின்மை, தொடர்புடைய | தற்போது சுவீகரித்துள்ள காணிகளின் அளவை அறிக்கையை விரைவில் பெற்று காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆவணங்களை வழங்க நபர்களிடம் ஆர்வமின்மை மற்றும் காணப்படும் சட்ட சிக்கல்கள் போன்ற விடயங்கள் இதற்க காரணமாக அமைந்தன. | |
| (ஆ) | இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த 04 ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 23,127 ஆனதுடன் வழங்க வேண்டியிருந்த மொத்த இழப்பீடு ரூபா 1,268,091,549 ஆன போதும், 2021 திசெம்பர் 31 திகதியன்று மேலும் வழங்க வேண்டியிருந்த பணம் ரூபா 276,965,651 ஆக காணப்பட்டது. | தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திடம்கோரும் அளவே கிடைக்காமை,கொடுப்பனவு செய்ய தேவையான ஏற்பாடு மற்றும் முற்பணம் இதுவரை கிடைக்கவில்லை எனவும், நபர்களினால் பூரணமற்ற விண்ணப்பங்கள் வழங்கியுள்ளமை மற்றும் விண்ணப்பங்களை வழங்காமை போன்ற விடயங்கள் இதற்கு காரணமானது. | குறித்த இழப்பீட்டுத் தொகையை விரைவில் செலுத்த கூடிய வகையில் திட்டமிட வேண்டும். |

**3.4 பெறுகைகள்**

-------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------------------- | ------------------------------- | ----------------- |
| (அ) | 02 பிரதேச செயலகங்களில் 02 செயற்திட்டங்களிற்கு உரியதாகஒழுங்கான தொழிநுட்ப முறைமை ஒன்றைகடைபிடித்துஉரிய பொழிப்பு சக்தியுள்ளதாக என உறுதி செய்து கொள்ளாது கொன்கிரீட் கலவை பரப்பி நிர்மாணித்த 04 பாதைகள் தொடர்பாக64.09 ($m^3$) கன மீட்டர்களிற்குரூபா 1,876,515செலுத்தப்படடிருந்தது. | 04 பாதைகளிற்காக பரிசோதனை நடாத்தப்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. | பாதை நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்கையில் நியம பொழிப்பு சக்தி காணப்படுகின்றதா என உறுதி செய்து கொள்ள வேண்டும். |
| (ஆ) | கஹவத்த பிரதேச செயலகத்திற்குரிய 12 நிர்மாண செயற்திட்டங்களின் 14 வேலை | அவதானிப்புடன் இணங்குவதாகவும், இதன் | நிர்மாணம் உரிய தரத்தில்மேற்கொ |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களிற்காக ரூபா 221,093 விஷேட கட்டண அட்டவணை/ கட்டண பகுப்பாய்வின் (SSR/Rate Analysis) கீழ் வெலுத்தியிருந்த போதும் மாவட்ட செயலகத்தின் பொறியியலாளரின் அல்லது உயர் தொழிநுட்ப அறிவுடன் கூடிய உத்தியோகத்தர் ஒருவர் நிர்மாணங்கள் உரிய தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என பரிசோதித்து அங்கீகரித்திருக்கவில்லை. | பின்னர் ஆலோசனை பிரகாரம் செயற்பட அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுத்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | ண்டுள்ளதாக பரிசோதித்து கொடுப்பனவை அங்கீகரிக்க வேண்டும். |
| (இ) | நெடுஞ்சாலை தொடர்பான கட்டண அட்டவணை (HSR) ST 47 பிரகாரம் 1:2:4 கொன்கிரீட் கலவையின் குறைந்தபட்ச சக்தி 20/N/mm$^2$ ஆக வேண்டியதுடன் எலபாத்த பிரதேச செயலக பிரிவிற்குரியதாக இப் பொழிப்பு சக்தியை பரிசோதிக்கும் முறையாக ஹெமர் பரிசோதனையை மேற்கொண்டு ஏற்பாட்டு கூட்டுத் தொகை ரூபா 2,500,000 ஆன 04 பாதைகள் தோல்வியென இனங்காணப்பட்டிருந்தன. இவ்வாறு தோல்வியான பாதைகளிற்காக கோ கடர் (Core Cutter) பரசோதனையொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அப் பரிசோதனையும் தோல்வியடைந்திருந்தது. இப்பாதைகள் தொடர்பாக பொருட்களை அளவிட அனுமதித்த அளவிலான பெட்டிகள் பயன்படுத்தப்படாமை, தளத்திற்கு கொண்டுவரப்பட்ட மணல் உரிய தரத்தில் இல்லாமை, பயன்படுத்திய பொருட்கள் அவற்றின் மூலங்களுடன் குறித்துக் கொள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமை, பரிசோதனை அறிக்கை பிரகாரம் ஆராய்ச்சி மாதிரிகளின் கனதிஉரிய கனதியான 0.15m இலும் குறைந்த அளவில் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதையின் அளவுத்திட்டம்தொடர்பில் கிட்டிய மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் தொடர்பாக அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பதாக, மற்றும் குறித்த அளவுத் திட்டங்கள் தொடர்பாக ஒப்பந்ததாரர்களை தொடர்ந்து அறிவூட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நியமத்திற்கு அமைய செயற்பட்டதாக மேற்பார்வை செய்யாமை தொடர்பாக தொடர்புடையபொறுப்பு வாய்ந்த தரப்பினரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | குருவிட பிரதேச செயலகத்தில் கரபிஞ்ச இறப்பர் நாற்று மேடையின் நில தயாரிப்பு மற்றும் கிலைபொசேட் களஞ்சியப்படுத்த பொருத்தமான வகையில் கட்டிடமொன்றை தயாரிக்க அகழிவியந்திரம் ஒன்றின் | பதிலை ஏற்க முடியாது. 2019 ஜுலை 04 மற்றும் 2020 பெப்ரவரி 24 திகதிய மாவட்ட பொறியியலாளரின் கடிதம் பிரகாரம் இயந்திரம் | அரச கருமங்களை மேற்கொள்ளும் போது சிக்கனம் தொடர்பாக விஷேட கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | (excavator) மூலம் மரங்களை அகற்றி நிலத்தை தயாரிக்க 2020 செப்டம்பர் 29 திகதி ஒப்பந்ததாரருக்கு ரூபா 959,020 செலுத்தப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 29 திகதி மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது இயந்திரத்தை பயன்படுத்தாது இயந்திர மீட்டர் மணித்தியாலம் 455.47 இற்காக ரூபா 783,408 மேலதிகமாக செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இவ் ஒப்பந்த மதிப்பீட்டின் வேலை விடயம் இலக்கம் 06 இன் கீழ் குறைபாடொன்றும் காணப்பட்டதுடன் உதவி பணிப்பாளர் (கொள்கை திட்டமிடல்) இனால் கொடுப்பனவை பரிந்துரைக்காது அதற்கு பதிலாக நிர்வாக உத்தியோகத்தரால் கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. மேலும், வழங்குனரிடமிருந்து கொடுப்பனவிற்காக பட்டியலொன்றும் பெற்றிருக்கவில்லை. | களத்தில் உண்மையாக வேலை செய்த இயந்திர மணித்தியாலத்தை உறுதி செய்து கொண்டு கொடுப்பனவு செய்ய வேண்டுமென அறிவித்திருந்த போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், நிதிப் பிரமாணம் 156(i) பிரகாரமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | உள்விவகார அமைச்சின் கீழ் ரூபா 2,000,000 வீதம் 68 நாட்களில் நிர்மாணிக்கும் அடிப்படையில் 2017 ஒக்டோபர் 25 திகதி ஒப்பந்தமிட்டு பெல்மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய கல்லின்ன மற்றும் மொறதொட்ட நில செவன அலுவலகத்தை நிர்மாணிப்பது தொடர்பாக 16 வேலை விடயங்களிற்கு ரூபா 567,269 ஆன மேலதிக கொடுப்னவு தொடர்பாக கணக்காய்வு திகதிய 2022 பெப்ரவரி 02 அளவிலும் பரிசோதனை நடாத்தி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக பரிசோதனை நடாத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை கிடைத்தவுடன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாகவும் அறிவிக்கிறேன். | நிதிப் பிரமாணம் 156 (i) பிரகாரம் மேலதிக கொடுப்பனவு தொடர்பாக பரிசோதித்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | வீட்டிற்கு வீடு கிராமத்திற்கு கிராமம் அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2015 கீழ் பலங்கொட பிரதேச செயலகத்திற்கு சொந்தமான மெதபெத்த சேவா பியச அலுவலகம் நிர்மாணிக்கப்பட்ட நிலத்தில்/ பிரதேசத்தின் மண்ணில் தன்மை பற்றிய உரிய கவனத்தின்/ பரிசோதனையின் பின்னர் அதற்கு உகந்த வகையில் கட்டிட அத்திவாரத்திற்கான திட்டம்/ மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அது தொடர்பாக எவ்வித கவனமும் செலுத்தாது (கவனயீனமாக) கட்டிட அத்திவாரத்தை கருங்கல் மற்றும் சீமேந்து மாத்திரம் பயன்படுத்தி நிர்மாணித்த காரணத்தால் அசாதாரண பிளவிற்குட்பட்டு ரூபா 1,279,531 ஆன கட்டிடத்தை பூர்த்தி செய்து 05 வருடங்களின் பின்னர் உடைத்தகற்ற தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு மூலம் | இது தொடர்பாக கள பரிசோதனை ஒன்று செய்யப்பட்டுள்ளதாகவும், பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் முன் நடவடிக்கை எடுத்து பூரண அறிக்கையை சமர்ப்பிக்கிறேன். | நிர்மாணம் மேற்கொள்கையில் உரிய சாத்தியப்பாட்டு ஆய்வை மேற்கொள்ள வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 156(i) தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவிட்ட பணம் விளைவற்ற செலவொன்றாக இருந்தது. | | |
| (எ) | எம்பிலிபிட்டிய பிரதேச செயலக பிரிவிற்குரிய பாதை நிர்மாண செயற்திட்ட களப் பரிசோதனையின் போது ரூபா 4,455,579 செலவில் 2020 ஆண்டு தார்/ கொன்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்த 03 பாதை செயற்திட்டங்களை பயன்படுத்த முடியுமாக இருக்கையில் மீண்டும் காபட் இடுவதற்காக பாதையை தயாரிக்கும் சந்தர்ப்பம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. | 2020 ஆண்டு பூரணகிராமமொன்று வேலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட அக் செயற்திட்டம், 2021 ஆண்டில் எஞ்சிய பாதைகளை காபட் இடலின் கீழ் அபிவிருத்தி செய்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்காக பிரதேச சபை குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அறிவிக்கிறேன். | அரச பாதுகாப்பு, உள்விவகாரங்கள் மற்றும் அனர்த்த முகாமை இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2021 பெப்ரவரி 12 திகதிய இலக்கம் 2/2021 கொண்ட ‘‘மாவட்ட இணைப்புக் குழு மற்றும் பிரதேச இணைப்புக் குழுக் கூட்டம் தொடர்பான வழிகாட்டி’’ பக்கம் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஏ) | 2017 ஆண்டு வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை குடியேற்ற உத்தேச காணியில் பாதை அமைப்பதற்கு கிரிஎல்ல மற்றும் எஹலியகொட பிரதேச செயலகங்களிற்கு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமை அமைச்சின் மூலம் ரூபா 18 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அப் பாதைகளை நிர்மாணிக்கையில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9 பந்தியின் 3.9.2 கீழ் சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு நேரடி ஒப்பந்தம் வழங்குதல் மற்றும் 3.9.4 கீழ் விலைமனு கோரி பொருத்தமான ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்தல் எனும் இரண்டு மாற்று வழிமுறைகள் தொடர்பாக வழிகாட்டல் வழங்கப்பட்ட போதும், 3.9.4 தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி போட்டிப் பெறுகைகள் மூலம் அரசிற்கு பெற்றுக் கொள்ள முடியுமான இலாபம் தொடர்பில் கவனம் செலுத்தாது குறித்த நடவடிக்கைகளை சமுதாய அடிப்படை அமைப்புகள் மூலம் வேலையை பகுதிகளாக பிரித்து நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அதிஅபாய பிரதேசம் ஆகையால் பயன்பாட்டாளர்களை துரிதமாக கிராமங்களில் குடியமர்த்த தேவையான உட்கட்டடைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டியதாலும், ஆண்டினுள் செயற்படும் ஏனைய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நேரடி ஒப்பந்தம் வழங்களின் கீழ் மேற்கொண்டுள்ளதாலும், போதிய ஒப்பந்ததாரர்கள் பிரதேச செயலகத்தில் பதிவு செய்தில்லாததாலும், சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு நேரடி ஒப்பந்தம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.2 மற்றும் 3.9.4 வழிகாட்டி பிரகாரம் அரசிற்குஇலாபகரமான விதத்தில் ஒப்பந்தங்களை வழங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஐ) மதிப்பீட்டு பெறுமதி ரூபா 4,673,034 ஆன எஹலியகொட நெதுரன மொரபிடியவத்த பாலத்தை மீள்திருத்தி 2021 திசெம்பர் 31 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் 02 சந்தர்ப்பங்களில் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதும், 2022 ஏப்ரல் 01 திகதி பௌதீக ரீதியாக பரிசோதித்ததுடன் அத்திகதியிலும் பௌதீக முன்னேற்றம் 30 சதவீத அளவான கீழ் மட்டத்தில் நிலவியது. பாளத்தின் நிர்மாண பணிகளின் தாமதம் காரணமாக கிராமவாசிகளுக்கு பாதுகாப்பற்ற தற்காலிக பாலத்தால் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. | மதியுரை சேவையை வழங்கும் போது ஏற்பட்ட பிரச்சனைக்குரிய நிலைமை, நிர்மாண இடத்தில் நிலவிய நிலையற்ற தன்மை, நிர்மாணத்திற்கு தேவையான மூலப் பொருட்களை சந்தையில் பெற்றுக் கொள்ள முடியாதமை போன்று அக்காலத்தினுள் பிரதேசத்திற்கு தொடர்ந்து பெய்த மழை காரணமாக பாலத்தின் நிர்மாணம் தாமதமானது. | அபிவிருத்தி செயற்திட்ட நடவடிக்கைகளை செயற்திறனாக மற்றும் பயனுறுதி மிக்கதாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 15 பிரதேச செயலக பிரிவுகளில் ஓராண்டு முதல் 40 ஆண்டுகள் அளவு காலமாக பயன்படுத்தப்படாத 122 அரச கட்டிடங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தில் ஓராண்டை விஞ்சிய காலமாக பயன்படுத்தப்படாத 06 அரச கட்டிடங்கள் வினைத்திறனான செயற்பாடுகளிற்கு பயன்படுதப்படாது புற்கள் முளைத்து காணப்பட்டன. | அது தொடர்பாக குறித்த நிறுவனங்களை அறிவூட்டல், கட்டிடங்கள் துருப்பிடித்துள்ளதால் மீள்திருத்தி பயன்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த ஆதனத்தை முறையாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டியதுடன் அரச ஆதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |

## 3.6 அரச ஊழியர்கள் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 மற்றும் உள்ளக,உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2019 மார்ச் 23 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் 10 பிரதேச செயலகங்களில் பிணை வைக்க வேண்டிய 29 அலுவலர்களினால் பிணை வைப்பை செய்திருக்கவில்லை.நிதிப் பிரமாணம் 881 (ii) ஏற்பாடுகள் பிரகாரம் அவ்வாறு பிணை வைக்க வேண்டிய கீழ் நிலை அலுவலர்களிடமிருந்து உரிய காலப் பகுதிக்குள் பிணை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 (ii) பிரகாரம் பிணை வைப்பு மேற்கொள்ள வேண்டும். |

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின்கருத் துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எஹலியகொட பிரதேச செயலக பிரிவில் கலாச்சார மண்டபமொன்றை நிர்மாணிக்க கலாச்சார மற்றும் கலைகள் தொடர்பான அமைச்சிடமிருந்து கிடைத்த ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் சிலப் (slab)மாத்திரம் நிர்மாணித்த பின்னர் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது.<br>08 ஆண்டுகளின் பின்னர் அதாவது 2021 ஆண்டில் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்ய கிடைத்த ரூபா 26,419,500 ஏற்பாட்டை, நிறுவனங்களிற்கிடையில் எவ்வித தொடர்புகளும் இல்லாமை, பின்னூட்டல் செயற்பாடுகள் பலவீனமடைந்தமை மற்றும் உரிய மேற்பார்வை இல்லாமை போன்ற முகாமைத்துவ பலவீனங்கள் காரணமாக ஏற்பாடுமீள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு களப் பரிசோதனையின் போது ரூபா 3,535,723 கிரயமான நிர்மாண இடம் பூரணமாக புற்கள் | 2019 ஒக்டோபர் 11 திகதிய தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் மூலம் இக் கட்டிடத்தை தற்போது நிர்மாணிப்பது தொடர்பாக வழங்கிய தகைமை அறிக்கையை எந்தவொறு நிறுவனத்தினாலும் மாவட்ட பொறியியலாளரிற்கு வழங்கவில்லை என மாவட்ட பொறியில் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக, அமைச்சினால் செயற்திட்டத்திற்காக முறையான மதிப்பீடொன்று மற்றும் கட்டிட வரைபட திட்டத்தை பெற்று | அபிவிருத்தி செயற்திட்டங்களை உரிய ஒருங்கிணைபுடன் மற்றும் உரிய மேற்பார்வையுடன் பயனுள்ளதாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முளைத்திந்தமை, நிர்மாண வளவில் பெறிய மரங்கள் வளர்ந்திருந்தமை போன்ற விடயங்களை கருத்திற் கொள்ளும் போது விளைவற்ற பயனற்ற சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கள் ஒன்றென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந் நிர்மாணம் 11 ஆண்டுகள் கடந்திருந்த போதும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | ஏற்பாட்டை ஒதுககிக் கொள்ள செயற்பட்டிருந்தால் இவ்வாறான நிலைமை ஏற்படுவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கிராமிய பாடசாலைகள் விளையாட்டு உட்கட்டமைப்பு மேன்பாட்டு இராஜாங்க அமைச்சிடமிருந்து கிடைத்தரூபா 1,500,000 ஆன ஏற்பாட்டின் கீழ் குருவிட பிரதேச சபை கொஸ்கல கைப்பந்தாட்ட விளைபாட்டரங்கை அபிவிருத்தி செய்து 2021 ஆண்டில் பூர்த்தி செய்திருந்த போதும் கணக்காய்வு திகதியான 2022 பெப்ரவரி 25 திகதி வரை விளையாட்டு மைதானத்தை பயன்படுத்தி இருக்கவில்லை. | குருவிட பிரதேச செயலாளரினால் சுட்டிக் காட்டிய குறைகளை சரி செய்து குறித்த புகைப்படங்களுடன் அறிக்கையிடுமாறு குருவிட பிரதேச சபை மதிப்பிற்குரிய தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தாதது தொடர்பில் குறித்த பொறுப்புவாய்ந்த தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் விளையாட்டு மைதானத்தை பயன்படுத்தக் கூடிய பொருத்தமான நிலைக்கு மாற்ற முயற்சி எடுக்க வேண்டும். |

## 3.8 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆண்டு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டரூபா 6,693,388 செலவிடப்பட்டிருந்த04 கலாச்சார மண்டபங்களை பயன்படுத்தாததன் காரணமாக அச்செலவு விளைவற்ற செலவாக இருந்தது. இது தொடர்பாக கடந்த அறிக்கைய மூலம் சுட்டிக் காட்டிய போதும் தேவையான செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கவில்லை. | கஹவத்த கலாச்சார மத்திய நிலைய காணியின் நிலையற்ற தன்மை காரணமாக பயன்படாததுடன் ஓபநாயக, வெலிகேபொல, கொலன்ன ஆகிய கலாச்சார மத்திய நிலையங்களின் நிர்மாண பணிகளிற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதா. | எஞ்சிய வேலைகளை விரையில் பூர்த்தி செய்து குறித்த மத்திய நிலையத்தை பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். |

**3.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரிஎல்ல பிரதேச செயலக பிரிவில் வெள்ள அபாயத்திற்கு உட்படும் கிராம சேவை பிரிவுகளிற்காக முன் ஏற்பாடாக வழங்கிய 51 தோனிகளில் 22 பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் அவற்றை திருத்த அல்லது அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக அவசர அனர்த்த நிலையில் இதன் மூலம் எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையொன்று காணப்பட்டது. | தோனி பூட்டுகளின் திருத்த வேலைகளை மேற்கொள்ள ஏற்பாட்டை பெற்றுத்தருமாறு கோரி அனர்த்த முகாதைத்துவ அமைச்சின் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் 22 தோனிகள் தொடர்பாக தேவையான ஒழுங்கு முறைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 07 பிரதேச செயலக பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் அமைந்துள்ள 45 அரச காணித் துண்டுகளை 2022 ஜனவரி 13 கணக்காய்வு திகதி வரையும் உரிமையை தீர்த்துக் கொண்டு பிரதேச செயலாளர் பொறுப்பிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சட்ட ரீதியாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக. | அரச காணிகளின் உரிமையை முறையாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கிராம பெண்களை வருமான உற்பத்தி வழிகளுக்கு செலுத்துதல் மற்றும் வருமான உற்பத்தி வழிகளில் ஈடுபட்டுள்ள பெண்களை ஊக்குவிக்கும் நோக்கில் 06 பிரதேச செயலக பிரிவுகளில் தொடர்ச்சியான கடன் வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. இதன் கீழ் பெற்றுக் கொண்ட கடனை 10 தவணைகளில் செலுத்த வேண்டிய போதும் 97 கடனாளிகள் பெற்றுக் கொண்ட கடன்களில் கூட்டுத் தொகை ரூபா 485,590 ஆன தொகை 05 மாதங்கள் முதல் 141 மாதங்கள் வரையான காலமாக நிலுவையாக காணப்பட்டது. | கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | தொடர்ச்சியான கடன் வேலைத் திட்டத்தை செயற்படுத்தும் ஆலோசனை தொடர் பிரகாரம் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செலுத்தாமை தொடர்பாக செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

**4 நிலைபேறான அபிவிருத்தி**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக எவ்வித உள்ளக சுற்றறிக்கை வெளியிடல் மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரித்தல் மேற்கொண்டிருக்கவில்லை. இது தொடர்பாக கடந்த ஆண்டுகளில் கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டியுள்ள போதும் அது தொடர்பாக கணக்காய்வு திகதியாகிய 2022 மார்ச் 25 அளவிலும் முறையான செயற்பாடொன்றை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளக சுற்றறிக்கை வெளியிடுவது தொடர்பாக எவ்வித ஆலோசனைகளும் அமைச்சு மட்டத்தில் அல்லது நிலைபேறான அபிவிருத்தி சபையின் மூலம் எங்களிற்கு வழங்கப்படவில்லை. அவ்வாறாயினும், இது தொடர்பாக பிரதேச செயலாளர்கள் மற்றும் குறித்த அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை செயற்படுத்தநடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5 நல்லாழுகை**

**5.1 பொது மக்களிற்காக சேவை வழங்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின்கருத் துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 1.4 வழிகாட்டி பிரகாரம் பிரஜைகள் பிரகடன சேவைகளை நாளாதுவரையாக்குதல், பின்னூட்டல் மற்றும் மதிப்பிடலும்மேம்படுத்தலும் மேற்கொள்ள வேண்டிய போதும், 03 பிரதேச செயலகங்களில் 2014 ஆண்டின் பின்னர் நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. | விரைவில் இச் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 1.4 வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 6 மனித வள முகாமைத்துவம்

இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் 18 பிரதேச செயலகங்களிற்குரிய 2021 திசெம்பர் 31 திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான ஆளணி எண்ணிக்கையுடன் இணக்கஞ் செய்கையில் 172 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் 117 ஊழியர் மிகையுமானதுடன், அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 உதவி பிரதேச லெயலாளர் பதவிகள்,08உதவி பணிப்பாளர் கொள்கை திட்டமிடல் பதவிகள்,19தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்மற்றும் 85 கிராம உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக காணப்படல் பிரதேசநிர்வாகத்திற்கு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பாதகமான வகையில் தாக்கம் செலுத்த முடியுமென அவதானிக்கப்பட்டது. மேலும் மிகை ஊழியர்கள் 117 ஆனதுடன் அவர்களை சேவையின் தேவைப்பாட்டை இனங்கண்டு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் மீது வைத்துக் கொள்ள மற்றும் ஏனையவர்களை மாற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ் வெற்றிடங்களை நிரப்பும் வரை பதிற்கடமை அடிப்படையில் அல்லது கடமை நிறைவேற்றல் மூலம் குறித்த கடமைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெற்றிடங்கள் மற்றும் மிகை பற்றிய தகவல்களை நாளாதுவரையாக்குவதன் மூலம் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு மற்றும் அரச சேவை, மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பியுள்ளதாக, ஆடசேர்ப்பு மேற்கொள்ளப்படுவது குறித்த அமைச்சின் மூலமென. | பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 71 பிரகாரம் குறித்த பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |